# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 20 ஆம் திகதிய
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2017. 10. 24 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## மதுவரி (திருத்தம்)

**(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத்
திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு
பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக அப்பிரிவின் சட்டப்பயனாவது கள்ளை உற்பத்தி செய்கின்ற ஏதேனும் பனைமரம் மற்றும் தென்னை மரத்திலிருந்து கள் இறக்கப்படுவதற்கான உரிமமொன்றை பெறுவதன் தேவைப்பாட்டை உள்ளடக்குவதாகும்.

ச.வ-ஒ. 63/2016

### (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 2018, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) அத்துடன் (இ) என்னும் பந்திகளை நீக்கஞ்செய்து, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஆ) கித்துள் மரத்தைத் தவிர, கள்ளை உற்பத்திசெய்யும் மரம் எதிலும் கள்ளிறக்கப்படுதலாகாது;

(இ) கித்துள்மரத்தைத் தவிர, வேறு ஏதேனும் மரத்திலிருந்து கள்ளு எடுக்கப்படுதல் அல்லது கீழிறக்கப்படுதல் ஆகாது.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 010389-475 (2017/10)